

தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக் நாதன், பொதுச் செயலாளர் அண்ணாமலை, பொருளாளர் வரதன் பூபதி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில், உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவற்றில் வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் தக்க சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருப்பெரும்புதூர் ஸ்ரீராமானுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள் ஆகியோர் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தனர். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 27.2.2025 அன்று முகாம் அலுவலகத்தில், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை யொட்டி வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.2.2025) முகாம் அலுவலகத்தில், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா சந்தித்து, முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்து தெரிவித்தார்.

### கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில்

# கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் அறிக்கை!

கடலூர், மார்ச் 1-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் நல்லாட்சி செய்து தமிழகத்தை அனைத்து துறைகளிலும் நம்பர் 1 மாநிலமாக திகழச்செய்த



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் , கிளை, வார்டு பகுதியில் கழக கொடியேற்றி இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள், அன்னதானம் , மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

அதுசமயம் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுகுழு, உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் அனை வரும் சம்மந்த பட்ட இடங்களில் கலந்து கொண்டு சிறப்பாக கொண்டாட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகளுக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதல்வர் பிறந்தநாள் விழா!

# கழகக் கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி, மார்ச். 1-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகம் சார்பில் கழகத்தலைவர், திராவிட மாடல் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று மார்ச் 1 சனிக்கிழமை மிக சிறப்பான முறையில் கொண்டாட வேண்டும் என தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அறிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது,

இன்று மார்ச் 1 தமிழக முதல்வர், கழகத் தலைவர்,



சமூக நீதிக் காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து அனைத்து ஒன்றியங்கள், நகரப் பகுதிகள், பேரூர் பகுதிகள், கிளைக் கழகங்களில், கழக நிர்வாகிகள் தங்களது பகுதிகளில் கழக இரு வண்ண கொடியை ஏற்றியும், கேக் வெட்டியும், இனிப்புகள் வழங்கியும், ஏழை எளிய பொதுமக்களுக்கு அன்னதானங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், ஒரே இலக்கு தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், 234 தொகுதிகளிலும் கழகம் வெல்ல மிகச் சிறப்பான முறையில் பிறந்தநாள் விழாவினை கொண்டாட வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன், இதில் ஒன்றிய, நகர, பேரூர்,கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள், நிர்வாகிகள் என அனைவரும் ஒன்றிணைந்து நமது திராவிட மாடல் நல்லாட்சியின் நாயகர், தமிழ்நாட்டு மக்களின் அப்பா, இரு மொழிக் கொள்கையை இறுக காப்பாற்றும் தமிழக முதல்வர், கழக தலைவரின் பிறந்த நாள் விழாவினை மிக சிறப்பாக கொண்டாடிடுமாறு இந்த அறிக்கையின் மூலம் நிர்வாகிகளுக்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ கேட்டுக் கொண்டுள்ளார்.